# இந்தியாவின் அரசியல், அயல்நாட்டுக் கொள்கைகளில் சில மாற்றங்கள்

உலகத்திலுள்ள சில நாடுகள் தங்கள் நிலப்பரப்பு, நீர்பரப்பை விஸ்தரிக்க முயற்சிப்பது. அடுத்த நாடுகளில் பிணக்குகளை உண்டாக்குவது. பின் அந்த நாட்டு துன்பத்தில் உள் வெளி மகிழ்ச்சி கொள்வது போன்றவை அக்காலம் தொட்டு நடந்து வருகிறது. உதவுகிறோம் என்ற போர்வையில் தங்களுக்குள் பகை கொண்டிருக்கும் இரு விரோத நாடுகளை நன்கு பயன்படுத்திக் கொண்டு தன் சுய லாபத்தில் குறியாய் இருக்கின்றன. இரண்டு விரோதி நாடுகளில் போட்டுக் கொடுப்பது. நடுநிலை வகிப்பது அல்லது ஏற்ற இரக்கத்தில் நேரத்திற்குத் தகுந்த மாதிரி ஆதரவு தருவது போன்றவை நிகழ்ந்து வருவதையும் காண்கிறோம். குறிப்பாக இந்த நடைமுறையை அமெரிக்கா என்னும் வல்லூறு நாடு இந்தியா மற்றும் பாகிஸ்தான் நாடுகளிடம் நன்கு செயல்படுத்தி வருவது கவனத்திற்குறியது.

இந்தியா முதலாவதாக செய்ய வேண்டியதாக இருக்கும் செயல்களாக, ஆசியாவிலுள்ள சீனா உள்பட அனைத்து அண்டை நாடுகளிடம் நட்பு, நல்லுறவு ஏற்படுத்த கவனம் செலுத்த வேண்டும். தூரத்துக்காரனின் சுயநல சூழ்ச்சிக்கார உறவைவிட பக்கத்து வீட்டுக்காரர்களின் உறவே மிக இன்றியமையாதது.

நேரு காலத்து இந்தியா முண்டா தட்டிக்கொண்டு உலகத்திலுள்ள பிரச்சினைகளில் மும்முரம் காட்டி பெருமை பகற்றுவதில் குறியாக இருந்திருக்கிறது. தன்னுடைய அவசியத் தேவைகளான அமைதி, நிம்மதி, மகிழ்ச்சி ஆகியவற்றை அடைவதில் கோட்டை விட்டுவிட்டது. சீனாவை மிஞ்சும் வகையில் அண்டை நாடுகளுடன் உறவை வளர்த்துக் கொள்வதில் போதிய புத்திசாலித்தனம் உபயோகப்படுத்தப்படவில்லை என்பது உண்மையே. இந்தியாவிற்கு சில மைல்கல் தூரத்திலிருப்பதும் தன் வம்சா வழியினரை கணிசமாகக் கொண்டதுதான் இலங்கையோடு கூட உண்மை உறவை கொண்டாடி வரவில்லை. நல்ல உறவு இருந்திருந்தால் இலங்கைத் தமிழர் பிரச்சினைகள் எளிதாகத் தீர்க்கப்பட்டிருக்கலாம். ஆனால் கம்யூனிச கொள்கை கொண்ட சில ஆயிரம் மைல்களுக்கு அப்பால் உள்ள சீனா ஒரு ஜனநாயக நாட்டுடன் முக்கிய நண்பனாக விளங்குகிறது.

இதற்கு முக்கியமானக் காரணங்களுள் ஒன்று, இந்தியா முன்னர் வடக்கு, தெற்கு என ஒரு வித பாகுபாடு மனப்பான்மையுடன் செயல்பட்டது எனக் கூறினால் தவறாகாது. இலங்கைத் தமிழர் பிரச்சினையைக் கண்டுகொள்ளாமல் காலம் தாழ்த்தியதால் வயிற்ற வலியுடன் துன்பப்பட்ட இலங்கைக்கு சீனா பல உதவிகள் செய்து தன் காலை வேரூன்றிவிட்டது.

ஆரம்பத்தில் இந்திய தன்னைச் சுற்றியுள்ள சிறு நாடுகளை மதிக்காமல் நடந்து கொண்டு விட்டதோ என எண்ணத் தூண்டுகிறது. அத்துடன் சீனாவின் பலம், ஆதிக்கம், தேவைகளினாலும் பாகிஸ்தான், நேபாளம், இலங்கை, பர்மா போன்ற நாடுகள் சீனாவின் பக்கம் அதிக ஆதரவு தெரிவிக்கின்றன.

சீனா மற்ற நாடுகளுடனான தன் எல்லைப் பிரச்சினைக்கு முதலில் பயமுறுத்தலைச் செய்யும். பின்னர் அந்த நாடுகளை சாட்சிக்காரன் காலில் விழுவதைவிட சண்டைக்காரன் காலில் விழுவதே மேல் என தன் காலில் விழ வைத்துவிடும். பிறகு நட்பு, உறவு, கொடுக்கல் வாங்கல், உதவி என எல்லாம் நடந்து வலுவாகிவிடும். இதற்கு பர்மா ஒரு உதாரணம். இந்தியாவையும் அவ்வண்ணமே பயமுறுத்திப் பார்த்தது. இந்தியா பெரிய நாடாகையால் நினைத்த வெற்றி கிட்டவில்லை.

இந்தியா தன் எல்லையை விஸ்தரித்த விதமான அஸ்ஸாம், பஞ்சாப், காஷ்மீர், சிக்கிம், அருணாசல பிரதேசம் போன்றவற்றை சேர்த்துக் கொண்ட விதங்களை சீனா, பாகிஸ்தான் மட்டுமன்றி உலகின் பல நாடுகள் திருப்தி கொள்ளவில்லை.

இந்தியா சுதந்திரம் பெறும் காலத்தில் சீனாவுடன் இருந்த நட்பைப் பயன்படுத்தி இந்திய – சீனா எல்லை பிரச்சினைகளை அப்பொழுதே துர்த்துக் கொண்டிருக்க வேண்டும். அச்சமயங்களில் சீனாவை உயர்த்திப் பேசி காரியங்கள் சாதித்திருக்க இயலும். அந்நேரங்களில் சீனாவின் போட்டியாளரான ரஷ்யாவுடன் அதிக கூட்டு வைத்திருக்கத் தேவையில்லை. ரஷ்யா, அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகள், சீனா – இந்தியா – பாகிஸ்தான் பகையை வளர்த்து, நிலைநிறுத்தி தங்கள் ஆயுதங்களை விற்று பெரும் பணம் சம்பாதிப்பது மற்றும் தங்களை முக்கியத்தவம் வாய்ந்த நாடுகளாக நிலைப்படுத்திக்கொள்வது ஆகியவற்றில் குறியாக இருந்தன. இப்போதும் அவ்வண்ணமே இருந்து வருகின்றன. மேலும் மேற்படி பிரச்சினைக்குரிய நாடுகளின் முன்னேற்றத்தைக் குறைத்து தாங்கள் பலமுள்ளவர்களாக, பணக்காரர்களாக விளங்க வேண்டுமென்பது அவர்களது தந்திர செயலாகும்.

ஆயுதங்களைத் தயாரிக்கின்ற முதலாளிகள், தங்களுடைய அழிக்கும் பொருட்களை எப்படியும் உலகத்தில் விற்று செல்வமாக்குவது கட்டாயமாகிப் போனது. அதனால் உலகத்தில் இயன்ற அளவிற்கு இயன்ற பகுதிகளில் சூழ்ச்சியுடன் பிணக்குகளை நிரந்தரமாக்கி வருகிறார்கள்.

முன்னல் பல சமயங்களில் சீனாவுக்கு எதிர்ப்பாக மேலை நாடுகள் இந்தியாவை மேன்மைப் படுத்தி அதை வெறுப்பேற்றின. இதனாலும் இந்தியாவுக்கு தீமை உண்டாயிற்று. இந்தியா அக்காலக் கட்டத்தில் இதைப்புரிந்து செயல்பட்டிருக்க வேண்டும். மேலை நாடுகளின் சூழ்ச்சியைக் கவனத்துடன் கையாண்டு எப்பக்கமும் பகை இல்லாமல் சீனாவை விட்டுக் கொடுக்காமல் பரந்த மனதுடன் நட்பை சீராக்கியிருக்கலாம். சென்ற காலங்கள் சீனா தேவையில்லாமல் மேலை நாடுகளின் பிரச்சினைகளைப்பற்றி அனாவசியமாகப் பேசுவதில்லை. இப்போதும் மிகக் குறைவாகவே பேசுகிறது. இன்றைய நிலையில் அந்நாட்டின் ஒவ்வொரு வார்த்தையும் உலக அரங்கில் மிக கவனத்துடன், மிகுந்த முக்கியத்துவத்துடன் கேட்கப் படுகிறது. சீனாவிற்குப் பிறகுதான் இந்தியாவிற்கான முக்கியத்துவம் இன்றைய உலகில் இருந்து வருகிறது.

சீன – திபெத் பிணக்குகளில் இந்தியா நேரத்திற்கு தகுந்த மாதிரி மாறி மாறி இரு நிலைப்பாட்டை முரட்டுத்தன தைரியத்துடன் அவசரங்களில் எடுத்திருக்கக் கூடாது. இனி எக்காலத்திலும் திபெத்தனி நாடாக ஆக வாய்ப்பு இல்லை எனலாம். உலகத்தில் அநேகமான நாடுகளின் எல்லைகள் முடிவு செய்யப்பட்டு வரையறுக்கப்பட்டுள்ளன. இனிமேல் திபெத்தினால் இந்தியாவுக்கு பெரும் பயன் இருப்பதாக அறிய முடியவில்லை. இந்தியா விரும்புகிற திபெத் தனி சுதந்திர சுயாட்சி நாடாகவே இருந்திருப்பின் சீனாவினால் ஏற்படக்கூடிய எல்லை தாக்குதல் போன்ற கவலைகள் கனிசமான அளவிற்கு குறைந்திருக்க வாய்ப்பு இருந்திருக்கும். இதன் பிறகு அடிப்படையான விருப்பம் அறியாத்தனமானது. தலாய்லாமா இந்தியாவில் இருந்து கொண்டு திபெத் விடுதலைப்பற்றி பேசிக்கொண்டிருப்பது இந்திய–சீன உள் பகையை மேலும் வலிமையாக்கி இந்தியாவிற்கு நிரந்தர தலைவலியை கொடுத்துக் கொண்டிருக்கிறது.

சீனா இனிமேல் இந்தியாவுடன் உண்மையான உள் அன்பு நட்பு கொண்டாடுவது எதிர்பார்க்கக்கூடியதல்ல. மேலும் இதற்கு இடையூராக பாகிஸ்தான் இருந்து செயல்பட்டு வருகிறது.

அத்துடன் சீனாவின் முன்னேற்றம் உலகில் தாறுமாறாகப் படுபயங்கர வேகத்தில் போய் கொண்டிருக்கிறது. முன்னேற்றத்தை அடைவதில் இந்தியாவுக்கும சீனாவுக்கும் பெரும் வித்தியாசங்கள் உள்ளன.

சீன கம்யூனிசம் முன்னேற்றம் என்பது அரசின் கடுமை + மற்றவர்களின் உணர்வுகள், கருத்துக்களை ஏற்காமை + விடாப்பிடி + செந்நிற பயமுறுத்தல் + சர்வாதிகார அடக்குமுறை + இராஒளவத்தனம் + கண்டிப்பு + அனுசரித்துப்போகாமை + விட்டுக்கொடாமை + கடும் தண்டனைகள் ஆகியவைகளை உள்ளடக்கியது. இவைகளால் மக்களில் அடிமைத்தன்மை + அடங்கி நடத்தல் + கட்டாய ஒழுக்கம் + கடும் உழைப்பு + இயற்கையான சுறுசுறுப்பு ஆகியவைகளும் ஒன்றிணையும் போது அபரிமித வளர்ச்சி வருவது தடுக்க முடியாதது.

அதே சமயம் இந்திய முன்னேற்றம் முற்றிலும் வேறுவிதமானது. இந்தியாவில் பெரும்பகுதி சூழ்நிலைகள் இடர்பாடுகள் கொண்டதாக விளங்குகின்றன. இங்கு பின்வரும் எதுவுமே ஒழுங்கான முறைகளில் இயங்கவில்லை என்பது அப்பட்டமான உண்மை. அரசியல், அரசியல் கட்சிகள், அரசுகள், அரசு அதிகாரிகள், ஊழியர்கள், மக்கள் குறிப்பாக பெரியவர்கள் என அனைத்தும் குறைபாடுடையவைகள். இவைகளே இந்தியாவின் ஜனநாயக பயன்பாட்டில் கிடைத்த இலாபங்கள். இங்கு யார் எது வேண்டுமானாலும் செய்யலாம். சுய ஒழுக்கமம் இல்லை. சொல்லித்தர சரியான தலைமைகளும் இல்லை. தேவையற்ற, பயன் தராதவைகளைக் காலத்திற்கு எடுத்துக்கொண்டு கலாட்டா செய்து கொண்டிருக்கின்றனர். இதில் குறிப்பிட்ட அரசியல் கட்சிகள் வெகு பிரபலம். இதற்குக் காரணம் இங்கு மலிந்து கிடக்கும் மூட நம்பிக்கைகள், கோமாளித்தனமான லட்சக் கணக்கிலான மதச்சடங்குகள், பல மத-சாதி கடவுள்கள் & சாமிகள், வழிஸழிடு முறைகள், சாமியார்கள், ஆன்மீக – தியான லஞ்ச ஊழலில் அனைவருக்குமான விருப்பம். கலப்பட வியாபாரிகள் போன்றவைகளாகும்.

இந்தியாவில் பொதுத்தேர்தல்களில் அரசியல் கட்சிகள் இவ்வளவு பணத்தை செலவு செய்கின்றவே. இந்த பணம் எப்படி வந்தது என பொதுமக்கள், தேர்தல் ஆணையம், நீதித்துறை என யாராவது அதிகம் பொருட்படுத்தும் வகையில் கவலை கொண்டனரா? அல்லது ஏதாவது தீர்க்கமான நடவடிக்கை எக்கப்பட்டுள்ளதா. சுதந்திரத்திற்கு பிறகு அறுபது ஆண்டகள் ஆகியும் ஒழுங்கு முறைகள் உண்டாவதற்கு வழிவகைகள் உண்டா. அப்படி இருந்திருந்தால் இந்நாட்டின் லஞ்ச ஊழல் பேய் தலை முதல் அடிவரை கோரத்தாண்டவம் ஆகுமா?

ஆனால் இங்குள்ளவர்கள் இந்தியா வல்லரசாகப் போகிறது என்பதை தினமும் கூறிக் கொண்டு தேதியும் குறித்திருக்கின்றனர். இந்தியா வல்லரசாகக்கூட வேண்டாம். இங்குள்ளவைகள் நல்லரசாகினாலே போதுமானது. ஆனால் இப்போதைய அரசியல் சாசன நடைமுறையின்படி முழு நல்லரசுகள் கிடைப்பதற்கு வாய்ப்புகளில்லை. ஏனெனில் தற்போதைய முறைகளின்மூலம் அரசியல் கட்சிகள் யோக்கியமாக, ஒழுக்கமாக, நாட்டுப்பற்று மிக்கதாக செயல்பட வழியில்லை. அவைகளுக்குள் கடும் போட்டா போட்டி போட வேண்டியிருப்பதால் குறுக்கு வழி, நெடுக்கு வழிகளை கையாள வேண்டியிருக்கிறது. இதனால் அரசியல் நாகரீகம் இல்லாமல் ஆகிறது. இங்கு சீரமைப்பு வேண்டுமெனில் அரசியல் சாசனம் அரசியல் விஞ்ஞானிகளைக் கொண்டு சீர்திருத்தம் செய்யப்படவேண்டும். அதன்மூலம் அரசியல் கட்சிகளின் எண்ணிக்கை, தேர்தல் செலவுகள் முறைகள், சுழற்சி / கூட்டாட்சி தத்துவம், ஊழல் அரசியல்வாதிகளுக்கு உடன் கடும் தண்டனை என்பவற்றிற்கு வகை செய்யப்படவேண்டும்.

இவைகள் கிடைக்கப்பெற்றால் இந்நாடு வெகு விரைவாக சீரும், சிறப்பும் பெற்ற உலகத்தின் தன்னிகரில்லா நாடாக மாறிவரலாம். ஆனால் இப்படி ஆகிவிடாமலிருக்க உலகத்தின் சில குறிப்பிட்ட நாடுகள் சில நிரந்தர ஏற்பாடுகளைச் செய்து வருகின்றன. அதற்குத் தக்கவாறு இங்குள்ள சில மனிதர்களை பல்வேறு வேடங்களில் அவர்களின் இரகசிய ஏஜெண்டுகளாக வைத்து காய் நகர்த்தல்களைச் செய்து வருகின்றன. இதற்கான ஆதாரச் செய்திகள் அவ்வப்போது வந்து கொண்டிருப்பினும் எவரும் பெரிதாகப் பொருட்படுத்திக்கொள்வதில்லை.

ரஷிய உளவுத்துறை நிறுவனம் கே.ஜி.பி-யின் ஓய்வுபெற்ற உயர் அதிகாரி வாஸிலி மித்ரோகின் தன்னுடய புத்தகத்தில் பல இரகசியத் தகவல்களை அம்பலமாக்கியபோது இந்தியாவில் பெரும் சர்சைகள் எழுந்தன. இந்திகாந்தி அம்மையாரின் ஆட்சியின்போது இந்தியாவின் பல முக்கிய முடிவுகளை சோவியத் ரஷியாவில் எடுக்கப்பட்டதை குறிப்பிட்ருந்தார். மேலும் இங்கு யார் யாருக்கு தேர்தல் டிக்கட் கொடுக்கப்படவேண்டும் என்பதைக் கூட அங்குள்ளவர்களின் வழிகாட்டுலின்படி செய்யப்பட்டதாக தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அங்கிருந்தவர்களுக்கு இங்கேயும், இங்கிருந்தவர்க ளுக்கு அங்கேயும் பலவகையான விருந்து உபசரணைகள் நடத்தப்பட்டதாக கூறியிருந்தார். மேலும் இங்கு யார் யாருக்கு தேர்தல் டிக்கட் கொடுக்கப்பட வேண்டும் என்பதைக்கூட அங்குள்ளவர்களின் வழிகாட்டுதலின்படி செயல்பட்டதாக தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அங்கிருந்தவர்களுக்கு அங்கேயும், இங்கிருந்தவர்களுக்கு அங்கேயும் பலவகையான விருந்து உபசரணைகள் நடத்தப்பட்டதாகவும் கூறியிருந்தார். அமெரிக்காவும் பல முக்கிய செயல்கள் முடிவுகளை இங்குள்ள முக்கிய மனிதர்கள் மூலமாக நிறைவேற்றி வருகின்றன.

இதிலிருந்து என்ன தெரிவின்றதென்றால், இந்தியாவின் இறையான்மையை தாழ்த்தியது தெரிகிறது. இந்தியாவை வெளிநாட்டினர் மானபங்கப்படுத்திக் கொண்டிருக்கின்றனர். அதற்கு இங்குள்ள சிலர் தூது வேலை பார்த்துக் கொண்டிருக்கின்றனர்.

ஒரு இந்து நாடு மேலாண்மைப் பெருவதை உலகம் விரும்பவில்லை. அதிமுக்கியமாக சீனா விலிd்ழிவில்லை. இந்தியா எப்பொழுதும் தனக்கு கீழேயே இருக்க வேண்டுமென அது விரும்புகிறது. இந்தியாவை சீனா சரியாக மதிப்பதில்லை. பல நேரங்களில் பொருட்படுத்துவதில்லை. இந்தியா அநேக சமயங்களில் சீனாவிடம் பயம் கொள்கிறது.

இந்தியா - சீனா, இந்தியா - பாகிஸ்தான் பிணக்குகள் நிலைபெற்றிருக்க வேண்டுமென ஆயுதங்கள் செய்து விற்கும் சில தந்திர நாடுகள் எப்பொழுதும் விரும்பி வருகின்றன. எங்கே அமைதி ஏற்பட்டுவிடுமோ என பயந்து நடுங்குகின்றனர். ஒருவேளை இந்தியாவிற்கு யோகமாக தங்களுடன் நிரந்தர உடன்பாடு உண்டாகி அமைதி ஏற்படுமாயின், அவர்கள் நொடித்துப் போவர்கள்.

எனவே, இன்றைய இந்தியத் தலைவர்கள் அனைத்தையும் ஆராய்ந்து இந்தியாவின் உண்மையான நலன்களுக்காக செயல்பட வேண்டுகிறோம்.